**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி மாதம் 9ம் நாள்
**இ.ம.எண். 2/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 82/2023**

1. மாவட்ட ஆட்சியர்,
மயிலாடுதுறை.
2. தாசில்தார்,
தரங்கம்பாடி. ..மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா, மடப்புறம் எண்.12, விநாயகர் கோயில் தெருவில் வசித்துவரும் இன்பநாதன் அவர்களின் மனைவி 53 வயதுள்ள அமுதசுரபி.
..எதிர்மனுதாரர் / வாதி

மனுதாரர்களால் இம்மனுவானது வாதி தரப்பில் சாட்சியம் அளித்துள்ள PW1 அவர்களை Recall செய்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு 23.06.2025 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 23.06.2025 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டது.

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.07.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K.S.S. குணசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. வில்சன் ஈஸ்டர் ராஜ் அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவாணை</u>**

முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ. 1,000/– கொடுக்கவேண்டும் என்றும், மேற்படி தொகையை 07.08.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தவேண்டும் என்றும், என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு, 2025ம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் நாள் என்னால் வழங்கப்பட்டது.

ஒப்பம் (P. கனிமொழி)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.